Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 20 1-1985 ஞாயிற்றுக்கிழமை (இரக்தாக்ஷி தை 7) முழக்கம் 179

## அடுத்த மாதம் 5ஆம் திகதி எம். ஜி. ஆர். பதவியேற்கலாம்!

தமிழக முதல்வராக திரு. எம் ஜி. இராமச்சந்திரன் பெப்ரவரி மாதம் 5ம் திகதி பதவியேற்கலாமென தமிழகத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. பெப்ரவரி 3ம் திகதி நியூயோர்க்கிலிருந்து புறப்படும் எம். ஜி. ஆர் பெப்ரவரி 4ம் திகதி சென்னை வருவாரென்று செய்தித் துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் நேற்று அறிவித்தார். அக்டோபர் 5ம் திகதி சென்னை அப்பொலோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, நவம்பர் 5ம் திகதி நியூயோர்க் புறப்பட்ட முதல்வருக்கு 5ம் திகதி அதிர்ஷ்ட தினமாக இருப்பதால், பெப்ரவரி 5ம் திகதி முதல்வராக பதவி ஏற்கலாமென்று கூறப்படுகின்றது.

## குண்டுவெடித்து யாழ்தேவி இரண்டாகபிளந்தது 6 பேர் மரணம்! 20 பேர் காயம்!

### முறிகண்டி பாதையில் நேற்றிரவு நடந்தது

பரந்தனிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற யாழ்தேவி ரயில், முறிகண்டிக்கும் மாங்குளத்துக்குமிடையே நேற்றிரவு குண்டு வெடித்து இரண்டாகப் பிளந்ததால் ரயிலில் பிரயாணம் செய்த ஆறு பேர் அவ்விடத்திலேயே பலியானார்கள். மேலும் இருபது பேருடைய நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

நேற்றிரவு 7 மணியளவில் முறிகண்டியிலிருந்துரயில் புறப்பட்ட பின்னர் இதனைப்பற்றிய தகவல் எதனையும் பெற முடியாத நிலையிலிருந்தது. ரயில் பாதையில் வைக்கப்பட்ட குண்டுவெடித்ததால்யாழ்தேவி இரண்டாகப் பிளந்ததாம். அதேவேளையில் ரயிலை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டனவாம்.

இந்த ரயிலில் பிரயாணிகள் இருக்கவில்லையெனவும், ஆயுதப்படையினரே இருந்ததாகவும் தெரியவந்துள்ளது, மரணமானவர்களின் சடலங்கள் நேற்றிரவே மீட்கப்பட்டன. காயமடைந்தவர்களை மீட்கும் வேலைகள் செய்தி அச்சுக்குப் போகும் போது நடைபெற்றுக் கொண்டிருந்தது

# பரந்தன் சூட்டுச் சம்பவத்தில் பெண், இரு குழந்தைகள் பலி!

## சீருடையினர் கைவரிசையால் நால்வர் படுகாயம்; கண்ணிவெடியால் பாரியகுழி

(கிளிநொச்சி நிருபர் மு. விவேகானந்தன்)

பரந்தன் கிளிநொச்சி பிரதான வீதியில் உரிமை கோரப்படாத கண்ணி வெடிகள் வெடித்ததாகக் கூறப்படும் சம்பவமொன்றை அடுத்து, போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றின் மீது சீருடையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினுல் அறுபத்தைந்து வயது வயோதிப மாது ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானுர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர் இதனையடுத்து கிளிநொச்சி பாதையில் எண்ணெய் ரயிலில் வந்த சீருடையினர் சிலர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினுல் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சகோதரிகளான இரு சிறுமிகளும் அந்த இடத்திலேயே மரணமானுர்கள்.

பரந்தனில் 'மர்மமான' மூன்று கண்ணிவெடிகள் வெடித்ததாகவும், இதனுல் இராணுவத்துக்கோ, பொதுமக்களுக்கோ, வாகனங்களுக்கோ எந்தச் சேதமும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்க பட்டது ஆனுல் கண்ணிவெடி வெடித்த இடங்களில் பாரிய குழிகள் ஏற்பட்டதால் பிரதானபாதை போக்குவரத்துக்கள் சீர்குலைந்துள்ளன.

நேற்று நண்பகலளவில் துணுக்காயிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்துகொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணம் செய்த துணுக்காய் கொட்டம்பியாக்குளம் வாசியான இராசதுரை செல்லம்மா (65) என்பவரே மரணமானவராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த செல்வமலர் கதிர்மலை (32), சரவணமுத்து சிவபாதசுந்தரம் (40), கந்தையா குமாரசாமி (63) பொன்னம்பலம் பொன்னுத்துரை (40) ஆகிய நால்வரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எண்ணெய் ரயிலிலிருந்தசீருடையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தினுல் மரணமான

—4-ம் பக்கம் பார்க்க

## லலித்தின் மற்றொரு திட்டம்

## யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு சமூகத்தவரை மட்டும் தனித்துவாழ இனிமேல் அனுமதிக்கமுடியாது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று அறிவித்தார,

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு சமூகத்தவரை மட்டுமே வாழ அனுமதிப்பதால் ஏற்படும் அபாயங்களை இப்போது அனுபவ பூர்வமாக தாம் அறிந்து கொண்டுள்ளதாகக் கூறிய அமைச்சர், யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டுமென்ற தமது கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் சுமார் முப்பதாயிரம் சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றுவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கபபடுவதாகவும் தெரிவித்த அமைச்சர், இவர்களுக்குச் சுய பாதுகாப்புக்காக துபபாக்கிப் பயிற்சி அளிக்கப்பட்டு, ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் சொன்னுர். பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் எடுக்கும் அகிம்சை வழியிலான நடவடிக்கை இதுவென்றும் அவர் குறிப்பிட்டார்.

## நெடுந்தீவுக் கடலில் ஆறு இளைஞர் கடற்படையால் கைது!

(கொழும்பு)

நெடுந்தீவுக்குத் தென்பகுதியிலுள்ள கடலில் வைத்து ஆறு தீவிரவாத இளைஞர்களைப் படகொன்றுடன் சேர்த்து கடற்படையினர் நேற்று அதிகாலை கைப்பற்றியதாக தேசிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது

குறிப்பிட்ட படகில் பத்துப் பேர் இருந்ததாகவும், நால்வர் கடலில் பாய்ந்து தப்பியோடி விட்டதாகவும், மிகுதி அறுவரும் கடற்படையினரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிடிபட்ட படகில் பத்து கிலோ கிராம் கஞ்சா இருந்ததாகவும், தீவிரவாதிகள் போதை வஸ்துப் பொருட்களுடன் கைதானது இதுவே முதற் தடவையெனவும் இங்கு

—4ம் பக்கம் பார்க்க

## யாழ் ரயில் பஸ் சேவைகள் கிளிநொச்சிவரை மட்டுமே

ஆனையிறவுக்கும் பளைக்கும் இடையே ரயில் பாதையில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததால் ரயில் பாதை தகர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனுல் இன்று முதல் கொழும்பிலிருந்து வட பகுதிக்கு நடத்தப்படும் ரயில் சேவை கிளிநொச்சி வரை மட்டுமே நடைபெறுமென்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது

வட பகுதிக்கான உணவு விநியோகம, எரிபொருள் விநியோகம், போக்குவரத்து ஆகியன இன்றுமுதல் வெகுவாகப் பாதிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

## நேற்று விடுதலையான பூஸா இளைஞர் ஆனையிறவுமுகாமில்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த யாழ்தேவி ரயில் நேற்றுப் பரந்தனுடன் நிறுத்தப்பட்டது பரந்தனில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதத்தை அடுத்தே ரயில் பரந்தனில் மறித்து பிரயாணிகள் இறக்கப்பட்ட பின்னர் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.

பூஸாவில் விடுதலை செய்யப்பட்டு நேற்றைய ரயிலில் வந்த இருபத்தைந்து தமிழ் இளைஞர்களும் ஆனையிறவு இராணுவ முகாமில் பாதுகாப்பாக வைக்

—4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ்நகர் வந்தனர்

பரந்தன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அகப்பட்ட பஸ்ஸில் பயணம் செய்த நாற்பதுக்கும் அதிகமானவர்கள் நேற்றிரவு ஏழு மணியளவில் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

அவர்கள் அணிந்திருந்த உடைகளில் இரத்தம் சிதறிய அடையாளங்கள் காணப்பட்டன. பலருடைய மணிக்கூடு, பணம் ஆகியன சம்பவம் நடைபெற்ற இடத்தில் பறிமுதல் செய்யப்பட்டதாம்

யாழ்நகரிலுள்ள பிரதான உணவு நிலையங்கள் இவர்களுக்கு இலவசமாக உணவும், தேநீரும் வழங்கி, இரவு தங்குவதற்கு இடமும் கொடுத்து ஆதரவு வழங்கின.

## ஏழு குற்றச்சாட்டு தொடர்பாக

## சிறில் மத்தியுவுக்கு எதிராக கட்சி ஒழுங்கு நடவடிக்கை

(கொழும்பு)

அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட களனித் தொகுதி ஐ.தே. கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. சிறில் மத்தியுவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதென்று கட்சியின் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளது.

இதற்கென கட்சித் தலைவர் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு தலைமையில் எட்டு சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 23ம் திகதி புதன்கிழமை விசாரணைக்கு முன் ஆஜராகுமாறு திரு. சிறில் மத்தியு கேட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- 4-ம் பக்கம் பார்க்க

## தந்தையும் மகனும் கொலை

(வவுனியா)

வவுனியாவில் அரசங்குளம் என்ற இடத்தில் நேற்றிரவு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் தந்தையும் மகனுமாக இருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டனம் கவலை அஞ்சலி

(கிளிநொச்சி)

வண. பிதா பஸ்தியானின் மறைவிற்கு கிளிநொச்சிகத்தோலிக்க ஆசிரியர் சங்கம் பலத்த கண்டனத்தைதெரிவித்துள்ள அதேவேளை அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டது இதேவேளை வண பிதா. பஸ்தியானின் மறைவிற்கு கிளிநொச்சி பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச்சங்கமும் கவலை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் வண. பிதாவின் மறைவு குறித்து அஞ்சலி செலுத்தினார்கள்

## திறக்கப்படாத பாடசாலைகள்

(ஓட்டுசுட்டான்)

அரசாங்கம் அறிவித்ததற்கமைய முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அகதிகள் இருக்கும் பாடசாலைகள் இதுவரை ஆரம்பிக்கப்பட வில்லை. அகதிகள் தங்கியிருக்கும் பாடசாலைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அப்பாடசாலை அதிபர்களாலேயே நிச்சயமாக கூறமுடியாமல் இருக்கிறது. அப்பாடசாலைகளில கல்வி பயிலும் மாணவர்கள் வருட ஆரம்பத்தில் தமது புதிய வகுப்புகளில் பாடங்களைத் தொடங்க முடியாமலும் தமது வேலைகளை ஆரம்பிக்க முடியாமலும் இருப்பதாகப் பெறுரோர் கவலை கொண்டுள்ளனர்.

## வண. பஸ்தியனுக்கு விசேட ஆராதனை

அண்மையில் வங்காலையில் சுட்டுக் கொல்லப்பட்ட அருள் திரு மேரிபஸ்ரியனின் ஆத்மா சாந்தியடைய வேண்டி மிருசுவில் புனித நிக்கிலார் ஆலயத்தில் விசேட பூசைப்பலியும், ஆராதனைகளும் நடாத்தப்பட்டன. மிருசுவில் பங்குத்தந்தை அருள். திரு அமிர்தகுமார் அடிகளாரால் நடாத்தப்பட்ட இவ் ஆராதனைகளில் பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்டனர்

## மன்னாரிலும் பிரஜைகள் குழு

(மன்னார்)

தலைமன்னாரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரஜைகள் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு;

தலைவர் - ஜனாப் உதுமா லெப்பை, உபதலைவர்-திரு. ஐ. எல். செல்வரட்ணம், செயலாளர்- எல் ஏ லேனாட், உபசெயலாளர்திரு வெற்றி தம்பசூரிய பொருளாளர்-ஜனாப் கே எஸ். எம் சின்ன வாப்பா, பொது சன தொடர்பு உத்தியோகத்தர் திரு: எஸ். காளிமுத்து, ஜனாப் முகமட்தாகிர், பாதுகாவலர்- பிரான்சிஸ் பெர்னாண்டோ.

கிளிநொச்சி அரசாங்க அதிபர்:

# இன்றைய நிலையில் ஆடம்பர வைபவங்களை தவிர்ப்போம்

(கிளிநொச்சி)

பொது மககள் அமைதியுடனும் பொறுப்புடனும் நடக்க முன்வர வேண்டும் நாடு இன்று இருக்கும் சூழ்நிலையில் ஆடம்பர வைபவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று கிளிநொச்சி திருநகரில் நடைபெற்ற வைபவம ஒன்றில் உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என் ஜெயநாதன் வேண்டுகோள் விடுத்தார்

கிளிநொச்சி திருநகரில் வாழும் மக்களுக்கு இலவசமாக தென்னம் கன்றுகள் வழங்கும் வைபவம் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு: எஸ். லிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு உரை ாற்றினர்.

இலவசமாக தென்னம் கன்றுகள் வழங்கும் வைபவத்திற்கான ஏற்பாடுகளை திருநகர் கிராம முன்னேற்ற சங்கம் செய்திருந்தது.

சிறப்பு விருந்தினர்களாக தென்னை அபிவிருத்தி பிராந்திய முகாமையாளர் திரு. தணிகாசலம், ஓய்வு பெற்ற சப் இன்ஸ்பெக்டர் எம். இராமநாதன், மாதர் சங்கத் தலைவி சோ. செல்வராணி, டாக்டர் கே. திருலோகமூர்த்தி, கட்டிடத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். திருக்கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் மேலும் பேசுகையில் ஒவ்வோர் வீடுகளிலும் தென்னம் கன்றுகளை நாட்டி உணவுத் தேவையில் சுயமாக தன்னிறைவுகாண வேண்டும். இலவசவாக தென்னம் கன்று வழங்கும் வைபவம் இப்பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். குறுகியகால தென்னங் கன்றுகளை நாட்டி நல்ல முறையில்அதைப்பேணி அதிக பலனை விரைவில் அடையுங்கள் என்றார்.




✻ சுண்டுக்குளி புவனேஸ் தம்பதிகளின் மகள் நிசாந்தா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ அளவெட்டி சிவராஜசுந்தரம் தங்கேஸ்வரி தம்பதிகளின் மகள் துஷியந்தி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

✻ தாவடிவடக்கு சின்னராஜா பத்மஜோதி தம்பதிகளின் மகன் சஜீபன் இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ வங்களாவடி முருகேசு வள்ளியம்மை சம்பதிகளின் மகன் நாகதீபன் இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ திருநெல்வேலி சிவலிங்கம் மரகதவல்லி தம்பதிகளின் மகன் சிவசங்கர் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ உடுப்பிட்டி, சமரபாகு ராசேந்திரம் தனலக்ஷ்மி தம்பதிகளின் மகன் மயூரன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ புங்குடுதீவு இராசதுரை பரமேஸ்வரி தம்பதிகளின் மகன் சதானந்தன் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## முல்லை அகதிகட்கு கிளிநொச்சி மக்கள் உதவி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அகதிகட்கு உதவுமுகமாக கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் நிதி சேகரிக்கும் பணியில் கிளிநொச்சி பிரஜைகள் குழு ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு கிராமங்களுக்குமாக ஒவ்வொரு குழு நியமிக்கப்பட்டு உணவுப் பொருட்கள், உடை, பணம் என்பன துரிதமாக சேகரிக்கப்பட்டு வருகிறது. தாமாக உதவ முன்வருவோர் கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்தில் தங்களின் உதவிப் பொருட்களை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## திருத்த வேலை முடிவுற்றது

கடந்த 1ம் திகதி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட மிருசுவில் புகையிரதப் பாலம் தற்போது திருத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இத்திருத்த வேலைகளில் அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட பல தொழிலாளர்கள் கடந்த ஒரு வாரகாலமாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

சுமார் 40 அடி நீளமான இப்பாலம் தற்போது நான்கு இலட்சம் ரூபா செலவில் தற்காலிகமாகவே திருத்தப்பட்டுள்ளது. நிலைமையை அனுசரித்தே இப்பாலத்தை நிரந்தரமாகத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

# சீருடையில் வந்தவரால் ஆசிரியையின் சங்கிலி அபேஸ்

பளை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கு மிருசுவிலைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரிடம் இருந்து இரண்டு பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்று சில தினங்களுக்கு முன்னர் வீதியில் வைத்து பட்டப் பகலிலேயே அபகரிக்கப்பட்டது

பாடசாலையில் இருந்து வீடு நோக்கி வான் ஒன்றில் இவர் வந்து கொண்டிருகையில் இவர் பிரயாணம் செய்த வான் சீருடை அணிந்தவர்களால் சோதனை செய்யப்பட்டதாம்.

சோதனை முடிவில் இவருடைய தங்கச் சங்கிலியைக் கண்ட சீருடை வீரர் ஒருவர் இவருடைய சங்கிலியை பறித்தெடுத்துக் கொண்டு அவர்களது 'கனரக' வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டாராம்.

பொது மக்களின் உதவி கோரப்படுகின்றது:

# யாழ்ப்பாணத்தில் கொள்ளையடிக்கப்பட்டு மீட்கப்படாத நாற்பத்தைந்து வாகனம்!

1984 ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரை யாழ் மாவட்டத்தில் கொள்ளையடிக்கப்பட்டு இதுவரை கண்டுபிடிக்கப்படாத வாகனங்கள் தொடர்பான விபரங்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டன் காரியாலயத்தால் வெளியிடப்பட்டுள்ளன,

கண்டுபிடிக்கப்படாத வான்களின் இலக்கமும், ரகமும் வருமாறு:-

38ஸ்ரீ 4566 (டெலிகா)
28ஸ்ரீ 9820 (ஹைஎஸ்)
28ஸ்ரீ 8364 (பிக்அப்)
30ஸ்ரீ 5603 (மினிவான்)
35ஸ்ரீ 131 (வொக்ஸ்வெகன்)
38ஸ்ரீ 325 (டெலிகா)
40ஸ்ரீ 1138 (டெலிகா)
34ஸ்ரீ 1389 (ஹைஹஸ்)
38ஸ்ரீ 6746(டொயோட்டா)

கண்டுபிடிக்கப்படாத கார்களும், இலக்கங்களும் வருமாறு:-

34ஸ்ரீ 1942 (பியட்)
9ஸ்ரீ 5018 (பேஜோ)
EY 3501 (சொமசெற்)

கண்டுபிடிக்கப்படாதமோட்டார் சைக்கிள்களின் இலககங்களும், ரகங்களும் வருமாறு:-

81ஸ்ரீ 5265 (ஹொண்டா)
84ஸ்ரீ 58 4 (ஹொண்டா)
8 ஸ்ரீ 3317 (ஹொண்டா)
86ஸ்ரீ 5767 (ஹொண்டா)
87ஸ்ரீ 4070 (ஹொண்டா)
86ஸ்ரீ 34 1 (யமஹா)
86ஸ்ரீ 3126 (யமஹா)
86ஸ்ரீ 1304 (ஹொண்டா)
88ஸ்ரீ 8100 (ஹொண்டா)
8 ஸ்ரீ 9787 (ஹொண்டா)
7ஸ்ரீ 46 (ஹொண்டா)
84ஸ்ரீ 3252 (சுசுகி)
84ஸ்ரீ 2876 (யமஹா)
82ஸ்ரீ 5353 (ஹொண்டா)
7ஸ்ரீ 732 (சுசுக்கி).
8ஸ்ரீ 6885 (ஹொண்டா)
83ஸ்ரீ 6896 (ஹொண்டா)
82ஸ்ரீ 543 (ஹொண்டா)
84ஸ்ரீ 6596 (ஹொண்டா)
80ஸ்ரீ 760 (யமஹா)
81ஸ்ரீ 8850 (ஹொண்டா)
89ஸ்ரீ 885 (ஹொண்டா)
88ஸ்ரீ 3361 (யமஹா)

கண்டுபிடிக்கப்படாத ஜீப்களின் இலக்கங்களும், ரகங்களும் வருமாறு:-

31ஸ்ரீ 5633 (மிட்சுபிஷி)
28ஸ்ரீ 5056 (மிடசுபிஷி)
27ஸ்ரீ 7816(லேண்ட்ரோவர்)

கண்டுபிடிக்கப்படாதட்ராக்டர்களின் இலக்கங்களும், ரகங்களும் வருமாறு:-

37ஸ்ரீ 1488(மேஸிபேகுசன்)
45ஸ்ரீ 3196 (டெய்லர்)
சி. சி. 81/1(மேஸிபேகுசன்)
44ஸ்ரீ 3595 (டெய்லர்)
36ஸ்ரீ 915 (மேஸிபேகுசன்)
45ஸ்ரீ 7668 (டெய்லர்)
37ஸ்ரீ 3802 (மேஸிபேகுசன்)

## மழையால் விவசாயிகள் பெரும் அவதி

(மானிப்பாய்)

அண்மையில் பெய்த பலத்த மழையினால் தாவடி, உடுவில், இணுவில் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்ட புகையிலைச் செடிகள் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதனால் நகைகளை அடைவு வைத்தும், கடன் வாங்கியும் செய்கையை மேற்கொண்ட தோட்டக்காரர்கள் வழி தெரியாமல் விழிக்கின்றனர் சிலர் தங்கள் தோட்டப் பராமரிப்பை அறவே கைவிட்டுள்ளனர்.

## 300 ரூபா முற்பணம்

(மன்னார்)

அரசாங்க ஊழியர்களுக்கு இம் மாதம் 300 ரூபா விசேட முற்பணம் வழங்கப்படவுள்ளது.

இப்பணம் பத்து மாத தவணையில் அறவிடப்படும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சைக்கிள் பாவனை அனுமதிவிண்ணப்ப படிவங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (புதியன Latest)

ஏல விற்பனை நிலையம் கோப்பாய்

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்கு தேவையான நவீன மின்சார உபகரணங்கள், நவீன தளபாடங்கள் TV, டெக், முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு. எ ச. ஜெறி, 53/1 ரெம்பிள் வீதி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கச்சேரி, பாடசாலைகள், தேவாலயங்களுக்கு அருகாமையில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய புத்தம் புதிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: எ. ச. ஜெறி, 53/1 ரெம்பிள் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

20'' அங்குல வர்ண T. V. யும, மன்னார் வீதியில் 3ம் கட்டையில் அமைந்துள்ள 10 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்குண்டு.

விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திரு. ச. தங்கராசா
92, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

மாதாந்தம் 36%. வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்

30-01-85 வரை

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

# யாழ்ப்பாணம்: கொழும்பு மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

கடந்த மாதம் 19ம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாண நகரமெங்கும் இராணுவத்தினர், எல்லாப் பக்கமும் சூழ்ந்து வழிமறித்து இளைஞர்களைக் கைது செய்தனர். அன்று கொழும்பு வர எண்ணியிருந்தேன். எல்லாப் பக்கமும் சோதனை; அத்தியடி மார்க்கமாகப் போய், புகையிரத வழி நடந்து யாழ்ப்பாண ஸ்ரேசன் அடைந்து, பொலீஸ் காவல் சூழ கொழும்பு சேர்ந்தேன்.

"கொழும்பில் தங்குது சிரமமான காரியம்" நண்பர்களோ உறவினர்களோ அஞ்சுகின்றனர். பொலீசார் திடுதிப்பென வந்து சோதனையிடக் கூடுமாம். புதியவர்களை வைத்திருக்க அஞ்சுகின்ற நிலைமை சட்டம் அப்படி.

தெரிந்தவர் யார் கண்டாலும் முதல் கேள்வி; எப்படி யாழ்ப்பாணத்திலிருந்து வந்தீர்கள்? அடுத்த கேள்வி யாழ்ப்பாணத்தில் கரைச்சலாமே. குண்டுகள் மயமாமே!

சிங்களப் பத்திரிகைகளும் தமிழ்ப்பத்திரிகைகளும் யாழ்ப்பாணம்பற்றிப் பிரசுரிப்பதைப் படித்து, யாழ்ப்பாணம் ஒரு பயங்கர பிரதேசம் என்று எல்லார் மனதிலும் பட்டு விட்டது. யாழ்ப்பாணத்தவரே, இப்போது எப்படி? வரவர கரைச்சல் கூடுகிறது போல கேட்கின்றனர்; உண்மையில் அமைதியில்லை!

தமிழர் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்தால் இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறிக் களைக்க வேண்டும்.

அத்தனை தூரம் யாழ்ப்பாணம் எல்லார் மனதிலும் சுழன்றடிக்கிறது. அதற்கேற்றாற்போல் அடிக்கடி வடபகுதியில் சம்பவங்கள் நடவாமலுமில்லை. யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்பு வருவது, பின்பு திரும்பி யாழ்ப்பாணம் போவது எல்லாம் பெரிய காரியம் எனவே எண்ணத் தோன்றுகிறது.

கோட்டைஸ்தானமோ்வேறு எங்குமோ ஒரு தமிழ் இளைஞன் எதிர்ப்பட்டால், துப்பாக்கி சகிதம் நிற்கும் பொலிசார் விசாரணை மேல் விசாரணை. அதனால் கொழும்பில் வாழும் தமிழ் வாலிபர்களும் வெளியே போய் வருவது குறைவு.

நன்றாகப் பழகிய சிங்கள முஸ்லிம் நண்பர்கள் யாழ்ப்பாணம்பற்றியறிய துடிக்கிறார்கள் இது புதினமறியும் ஆவலா? அல்லது அச்சமா? புரியவில்லை.

ஜனாதிபதியவர்கள் கூட அண்மையில் புலத்சிங்கள என்ற இடத்தில்பேசும்போது, சிங்கள இளைஞர்கள் ஆயுதப்

● புதுமைலோலன்

பயிற்சி பெறவேண்டுமெனவும், தமது படையினர் போதாதெனவும கருத்துப்படப் பேசியமையும் மக்களைக் குழப்புகிறது போலத் தெரிகிறது.

ரெலா, ரெலோ என்று விளக்கமில்லாமல் கேட்கின்றனர் யாழ்ப்பாணத்தில் வாழ்பவருக்கு எல்லாம் தெரியும் என எண்ணுகின்றனர். எமக்கே அவர்களைத் தெரியாது என்று கூற ஆச்சரியப்படுகின்றனர். பல இயக்கங்கள் உள்ளன என்பதும் அவர்களுக்குப் புரியாது. பிரபாகரன்; உமா மகேஸ்வரன் இரண்டும் சிலருக்குத் தெரிகிறது மற்ற எதுவுமே தெரியாது ஆனால் எல்லாருக்கும், "புலி" மட்டுமே புரிந்த ஒன்று. அந்தளவுக்கு அப்பெயர் பிரபல்யமடைந்துள்ளது. சாதாரண மக்கள் யாவும மறந்து தமது உணவுத் தேவைகருதி உழைப்பதிலேயே கண்ணாகவுள்ளனர். அரசாங்கம் திரும்பத் திரும்ப பொது ஜன தொடர்பு சாதனங்கள் மூலம் பயங்கரவாத ஒழிப்பைப் பற்றிப் பேசுவதும், பயங்கரவாதிகள் கைது எனக் கூறுவதும் காரணமாக அடக்கி விடலாம் எனப்பொது மக்கள் கருதுவதும் தெரிகிறது. அதே நேரம் விடயம் தெரிந்தோர் அப்பாவிகளைத் தான் கைது செய்கிறார்களாம் எனவும் கேட்காமலில்லை.

வட்டமேசை மகாநாடு பற்றி ஒரு அன்பர் பேசும போது, இரண்டு பக்கமும் எதிர்ப்பு, அமிர்தலிங்கமும் ஏற்கமாட்டார் உமாமகேஸ்வரன் ஒப்புக் கொள்ள வேண்டுமே எனவும், அதனால் தான் அமிர்தலிங்கம் எதிர்க்கிறார் எனவும் கூறினர். இப்படி கொழும்பு மக்களிடம் குழப்பம் பல. அரசு தெளிவு செய்வதைவிட குழப்பத்தையே அதிகம் எல்லா வகையிலும் உருவாக்கி விட்டது முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவின் அறிக்கை, அமைச்சர் சிறில் மத்தியூவின் அறிக்கை, அமிர்தலிங்கமவர்களின் அறிக்கை, எல்லாம் சரியென வந்த ஜனாதிபதியின் முதல் பேச்சு... அரசியல் அறிவு கொண்டவர்களே குழப்பும் போது, பாமர மக்கள் என்ன செய்ய முடியும்? வட்ட மேசை மகாநாடு நல்ல வழி பிலமையாமையையெண்ணி படித்த சிங்கள முஸ்லீம் மக்கள் கவலையடையவும் செய்கின்றனர். அமைதியாக வாழ்ந்த நாட்டினை இப்படியாக்கி விட்டனரே என்ற ஆதங்கம்.

இன்றைய ஆட்சிபீடத்தை பயங்கரவாதம் ஆட்டுகிறது என்பதனை யாரும் மறுக்கவோ மறக்கவோ மறைக்கவோ முடியாது. அதனால் யாழ்ப்பாணம் எல்லார் மனதிலும் வேர் ஊன்றி விட்ட பெயராய் விட்டது அப்படியிருந்தும் யாழ்ப்பாணமகன் கொழும்பை நாடாமலுமில்லை, தன்கருமங்களைப் பார்க்காமலுமில்லை— சிங்கள மகனுடன் பேசி வாழாமலுமில்லை கந்தோர்களில் தமிழருக்கு வேண்டியவற்றைச் சிங்கள மகன் செய்து கொடுக்காமலுமில்லை அரசு நிதானமாயிருந்தால், நிச்சயம் இலங்கையை சௌஜன்னிய பூமியாக்கலாம் ஆனால் பதவிக் கதிரைகளை நோக்கி, கண்ணோட்டம் விட்டுள்ள அரசியல் வாதிகள் குட்டையைக் குழப்பி, பதவி மீன் பிடிக்க முயல்வதால்

குழப்பம்— குழப்பம் கரைச்சல் கரைச்சல்... நல்ல முடிவு

## அருள்திரு பஸ்தியனுக்கு....



எப்பவும் போல
வானொலிச் சத்தல்
செவிட்டுப் பறையை
கிழித்துச் செல்ல
விநாடிக்கு விநாடி
விருப்புப் பேசும்
வீணர் கூட்டம்
விசர்க்கதை பேச
இப்பவும் போல
இன்னொரு செய்தி
இப்பவும் போலே
கண் முன்னே
எப்பவும் போலே
பணியிலே
நீ
முன்னே
எப்பவும் போலே
இன்னொரு செய்தி
எப்பவும் போலே
இன்றோ நாளையோ
நீயோ நானோ
நீ
சொன்ன
இப்பவும் போலே
என் செவியில்
எப்பவும் போலே
நீ
முன்னே
இப்பவும் போலே
நீ
சாவிலும் முன்னே
எப்பவும் போலே
அநீதி தொடரும்
இப்பவும் போலே
உன் வழியில்
நாம்
தொடர்வோம்

★ ஆனந்தன்

## பத்து பி. ஸி.க்கள் நியமனம்

'பிரசிடென்ஸ்கவுன்சில்' எனப்படும் ஜனாதிபதி வழக்குரைஞர்களாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி, மார்க் பெர்ணடோ, ஏ.கே. பிரேமதாசா, டன்ஸ்டன் டி அல்விஸ், என். ஆர். என். டலுவத்த, எஸ். எம். நசீம், ஆர் ஐ. ஒபயசேகரா, எட்வேட் எஸ். டபிள்யு சில்வா, பி ஏ டி. சமரசேகரா, எல். பி செனிவரத்தின ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ ஒரு கடிதம்

## நான் கள்வன் அல்ல! நடந்தது இது தான்!

"பலநாள் தேங்காய்த் திருடன் தென்னை மரத்துடன் கட்டப்பட்டார்." என்ற தலைப்பில் 'ஈழமுரசில் கடந்த 13ம் திகதி வெளிவந்த செய்தியில் சம்பந்தப்பட்டவர் என்று தம்மை அறிமுகப்படுத்தி மட்டுவில் வடக்கு வாசி ஒருவர் ஈழமுரசு அலுவலகத்துக்கு கடிதமொன்று அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர், தான் கள்வனல்லவென்றும் மரமேறித் தேங்காய் பிடுங்கும் தொழிலைச் செய்யும் தனக்கு மேற்படி தோட்டச் சொந்தக்காரர் மரமேறிய கூலியைத் தராது கடத்தியபின் ஒரு நாள் தம்மை தேங்காய் பிடுங்க விட்டுவிட்டு பின் கள்வனெனக் கூறி மரத்தில் கட்டிப்போட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிது நேரத்தின் பின் வீதியால் சென்ற சிலர் தன்னை அவிழ்த்து விட்டு தோட்டச் சொந்தக்காரரை ஏசியதுடன் இனிமேல் காசை வாங்கிவிட்டே தேங்காய் பிடுங்கிக் கொடுக்குமாறு தனக்கு புத்திமதி சொல்லி விட்டுப்போனதாகவும் அவர் கடிதத்தில் தெரிவித்தார்

ஆசிரியர் குறிப்பு:- கடிதம் எழுதியவர் தமது பெயரையும், விலாசத்தையும் குறிப்பிட்டுள்ள போதிலும், சில காரணங்களால் அவற்றை இங்கு பிரசுரிக்கவில்லை

## பல பகுதி அகதிகளுக்கும் செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(சுண்டுக்குளி)

யாழ் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலினாலும், கடற்கரைப் பாதுகாப்புப் பிரதேசச் சட்டத்தினாலும் பாதிக்கப்பட்டும், இடம் பெயர்ந்துமுள்ள தமிழ் தூரப்போய்க்கொண்டிருக்கிறது

புதிய சட்டமொன்றைப் பிரதமர் அறிமுகப்படுத்தியுள்ளார்; பொதுமக்களே குழுக்களாகத் தெரிவு செய்யப்பட்டு பாதுகாப்புச் செய்தால் என்பதாவது: அது நடைமுறைப் படுத்தினால் இன்றைய நிலைமை மிக மாறலாம். கொழும்பில் தமிழர் நடமாடுவது கடினம் அடையலாம். பாதுகாப்புப் படையினராலேயே அவதியுறும் நிலைமையிலும் ஒருவாறு தலைப்பட்டினம் வரவேண்டிய தேவை கருதி வருபவர்கள்; வர முடியாத நிலைமை ஏற்படலாம் என்றே நான் கருதுகின்றேன்.

அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஏற்கனவே வல்வெட்டித்துறை, அச்சுவேலி, வளலாய், சாவகச்சேரி, கைதடிப் பகுதி அகதிகளுக்குச் செஞ்சிலுவைச் சங்கம் நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது

தற்போது அகதிகள் தொகை அதிகரித்து வருவதால் கூடுதலான உதவிகளை வழங்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளதென்றும், தற்போது செஞ்சிலுவைச் சங்கத்திடம் நிதித்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்துப் பொது மக்களிடமிருந்து அகதிகளுக்கான நிவாரண உதவிகளைத் திரட்டுவதற்கெனத் தொண்டர் அமைபொன்று உருவாக்கப் பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது இத்தொண்டர்கள் சனிக்கிழமையிலிருந்து யாழ். மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் பணமாகவோ, பொருளாகவோ நிதி திரட்டும் இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

## கள்ளின்விலை அதிகரிப்பதால் ஊதியமும் அதிகரிக்கிறது

(மன்னார்)

பேசாலைப் பகுதியில் பனம் கள்ளின் விலை இம்மாதம் முதல் மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் பேசாலைப் பகுதியில் பனம் கள் விற்பனை குறைந்திருந்தால் தவறணையில் 3ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு போத்தல் பனம் கள் 50 சதம் குறைத்து 3ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது.

பனம் கள்ளின் விலை குறைந்ததால் சீவல் தொழிலாளருக்கு தவறணையால் வழங்கப்பட்டு வந்த வேதனமும் குறைக்கப் பட்டிருந்தது. இதன்படி சீவல் தொழிலாளர்களுக்கு போத்தல் ஒன்றிற்கு ஒரு ரூபா 50 சதமதம் வழங்கப்பட்டு வந்த வேதனம் ஒரு ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

இம்மாதம் முதல் பனம் கள்ளின் விற்பனை அதிகரித்துள்ளதால் 3 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த ஒரு போத்தல் பனம்கள் 3ரூபா 50 சதமாக அதிகரித்துள்ளது.

பனம் கள்ளின் விலை அதிகரித்தையடுத்து சீவல் தொழிலாளர்களின் வேதனமும் போத்தல் ஒன்றிற்கு ஒரு ரூபாவிலிருந்து ஒரு ரூபா 50 சதமாக அதிகரித்துள்ளது.

## சவப்பெட்டிக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

சவப்பெட்டிக்கு கிளிநொச்சியில் தற்போது மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் இறந்தவர்களின் மரணச்சடங்குகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது

கட்டுகஸ்தொட்டை என்னுமிடத்திலிருந்து கொண்டுவரப்படும் சவப்பெட்டி தயாரிப்பதற்கான சப்புப்பலகை தற்போதைய போக்குவரத்து சீர்கேடு காரணமாக தடைப்பட்டதாலேயே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால், ஒருவர் இறந்தபின்னர் இங்குள்ள சவப்பெட்டி தயாரிப்பாளர்களிடம் ஓடர் செய்து அதன் பின்னரே சவப்பெட்டி புதிதாக செய்து பெறக்கூடியதாகவுள்ளது.

## மன்னாரில் ஒரு சமூக விரோதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மடு வீதி எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு அண்மையில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்சடலம் கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

சமூக விரோதி என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்த இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிய வந்துள்ளது. இவ்விளைஞரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

## அப்பாவி மக்கள் அங்கலாய்ப்பு

(சுழிபுரம்)

பொன்னாலையில் மதுபோதையில் கலாட்டா செய்பவர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக இப்பகுதிப் பொது மக்கள் புகார் கூறுகிறார்கள். இரவு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்ற போதிலும் இவர்கள் அடங்குவதில்லையாம். தற்போது மிகவும் சோதனையானகாலகட்டத்தை அனுபவித்துவரும் எமக்கு இப்படியான தொந்தரவுகளையும் தந்து எமது நிம்மதியைக் கெடுத்து வரும் இவர்களை அடக்க யாருமில்லையா என தொந்தரவுக்குள்ளாகும் அப்பாவி மக்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

## இலங்கை வங்கி ஊழியர் உதவி

இலங்கை வங்கி யாழ். மாவட்டக் காரியாலய மற்றும் அதன் கிளைகளின் ஊழியர்கள் சேர்ந்து இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் உதவியுடன், அண்மையில் பாதிக்கப்பட்ட மயிலிட்டி அகதிகளுக்கு அரிசி, மா; சீனி முதலிய உணவுப் பொருட்களையும் உடுபுடவைகளையும்அன்பளிப்பாக கொடுத்தனர்.

இவ் அன்பளிப்பு யாழ். மகளிர் சங்கத்தினூடாக கொடுக்கப்பட்டது. முல்லைத்தீவு அகதிகளுக்கும் இவ்வாறு உதவிகள் செய்ய இவ் ஊழியர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# ஈழமுரசு

## ராஜீவின் பிரதம செயலாளர் அலெக்ஸாண்டர் ராஜினாமா!

இந்தியாவில் நேற்று முன்தினம் வேவு பார்த்தனர் என்ற சந்தேகத்தின்பேரில் ஏழு சிரேஷ்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் சிரேஷ்ட ஆலோசகர்களில் ஒருவரான பிரதம செயலாளர் ஜி வி. அலெக்ஸாண்டர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். இவர் மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பிரதான செயலாளராகவும் பல வருடங்கள் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. அலெக்ஸாண்டரின் பிரதம உதவியாளரான திரு டீ. என். கேவ் என்பவர் வேவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எழுவரில் ஒருவராவார். கைதான எழுவரும் இம்மாதம் 28ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பிரஜைகள் குழுவின் அறிக்கை:

# பூஸாவிலுள்ள வடபகுதி, மட்டக்களப்பு மலையக இளைஞருக்கு உடை விநியோகம்

டிசம்பர் 29 முதல் ஜனவரி 5 வரை பிரஜைகள் குழுத் தூதுக்குழு ஒறு கொழும்பில் நின்றபொழுது பூஸாவில் பாதுகாவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் யாவருக்கும் மாற்றுடையாக ஒவ்வொரு சாரமும் சேட்டும் கொண்டு சென்று கொடுத்தது சம்பந்தமாக மேற்படி குழுவால் விடுக்கப்பட்ட அறிக்கையின் பூரண விபரம் வருமாறு:

நாம் கொழும்புக்குப் புறப்பட்ட அன்று பூஸாவில் பாதுகாவலிலுள்ளோருக்கு மாற்றுடை இல்லாத தகவலை அறிந்து அவற்றைப் பெறுவதற்கான ஒழுங்குகளை யாழ். அரசாங்க அதிபர் மேற்கொண்டிருந்தார்.

டிசம்பர் 30ம் திகதி அன்று காலியில் பூஸா நிலைமையை அறிந்தபோது உடைகளை உடனடியாகக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்பட்டவையை கொழும்புக்குத் தருவித்துக் கொண்டு செல்வது இன்றைய சூழ்நிலையில் சாத்தியமற்ற ஒரு முயற்சியாகவே இருந்தது. 30ம் திகதி ஞாயிறன்று மத்தியானம் புறப்பட்டுச் செல்வதற்கான அனுமதியும் கிடைத்தது.

எனவே, கொண்டு செல்வதற்கான உடுப்புக்களை கொழும்பிலேயே உடனடியாகப் பெற வேண்டியிருந்தது. தூதுக்குழுவில் வந்திருந்த திரு ஆர் ஜே குணரத்தினம் தமது தனிப்பட்ட உறவுகள் காரணமாக அதற்குரிய ஒழுங்குகளைச் செய்தார். 30ம் திகதி ஞாயிறன்று மத்தியானம் சென்ற பொழுது திரு. இ. பாலசுப்பிரமணியமும், திரு. ஆர். ஜே. குணரத்தினமும் சென்றனர்.

நாம் ஆடைகளைக் கொண்டு சென்றோம். அங்கு சென்ற பொழுது அங்கு எல்லாமாக 503 பேர்கள் பாதுகாவலில் வைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. 349 பேர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தும் 154 பேர்கள் மட்டக்களப்பிலும், மலையகத்திலும் இருந்தும் கொண்டு வரப்பட்டிருந்தனர்.

முதற் தடவையாகக் கொண்டு சென்ற அத்தனை உடுப்புக்களையும் கொடுத்தோம். மீண்டும் மூன்றாம் திகதி அன்று சென்று மிகுதிப் பேருக்கு ஆடைகளைக் கொடுத்தோம். இரண்டாம் தடவை திரு ஆர். ஜே. குணரத்தினம் சென்றார்.

ஆடைகளை மிக அவசர அவசரமாகவே கொண்டு செல்ல வேண்டியிருந்தது. அதனால் யாழ்ப்பாணத்தில் செய்த ஒழுங்குகளை கொழும்பிலிருந்து இணைத்துக்கொள்வதும் சேகரிக்கப்பட்ட ஆடைகளை பெற்றுக் கொள்வதும் சிரமமாகவிருந்தது. காலதாமதமற்ற நிவாரணமற்ற முக்கியகுறிக்கோளாக இருந்ததால் அவ்வாறு நடந்தோம் நாங்கள் ஆடைகளைக் கொண்டு சென்ற இரு தடவைகளிலும் பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்தோர் எம்மைக் கண்டு சந்தோஷப்பட்டனர். மாற்றுடைகளை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர்.

பூஸாவுக்கு நாம் செல்வதற்கு வேண்டிய அனுமதி ஒழுங்குகளை விடுமுறையில் நின்றிருந்த பிரிகேடியர் நளின் செனவிரத்தின செய்தார். அவருக்கு எமது நன்றி பூஸாவுக்குக் கொண்டு செல்வதற்கான ஆடைகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளை யாழ். அரசாங்க அதிபர் செய்தார். அவருக்கு எமது நன்றி ஏற்பட்ட நிலைமைகள் காரணமாக இந்த ஒழுங்குகளைப் பயன்படுத்த முடியாது போய்விட்டது ஆயினும் அவர் எடுத்துக்கொண்ட சிரத்தைக்காக எமது கடப்பாட்டைத் தெரிவிக்கிறோம்.

## கண்டுபிடிக்க எவருமில்லையா? பொதுமக்கள் அவதி

# அச்சுவேலி வர்த்தகர்களின் மோசடி! பொருட்கள் குதிரைவிலை யானைவிலையில்!

(அச்சுவேலி)

கிராமப் புறங்களில் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க பொருட்களின் விலை அதிகமான அளவு கூட்டி விற்கப்படுகின்றது தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் வகை பல ரூபா கூட்டி விற்கப்படுகின்றது

பத்து ரூபாவிற்கு குறைவான விலை உடைய மின்சார பல்புகள் 14 ரூபாவில் இருந்து 16 ரூபா வரை விற்கப்படுகின்றன. உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சவர்க்காரம் கூட விலை அதிகரிப்புக்கு தப்பவில்லை.

ஐம்பது சதம் விலையுடைய மெழுகுதிரி ஒரு ரூபா வரை விற்கப்படுகின்றது.

பலபொருட்களில் தயாரிப்பாளர்கள் அச்சிட்ட விலை அழிக்கப்பட்டு வர்த்தகர்கள விரும்பிய விலைக்கு விற்பதை பல இடங்களில் சாதாரணமாகக் காணக் கூடியதாக உள்ளது. நாட்டில் சிவில்நிர்வாகம் குழம்பிய நிலையும்; விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் சாதாரணமாக நடமாடாத நிலையும் வர்த்தகர்கள் நினைத்த விலைக்கு பொருட்களை விற்பதற்கு சாதகமாக அமைந்து விட்டது.

பல்வேறு விடுதலை இயக்கங்கள் விலை கூட்டி விற்றல், பொருட்களைபதுக்கல் தொடர்பாக வர்த்தகர்களிற்கு எச்சரிக்கை விட்டும்; வியாபார நிலையங்களில் அண்மையில் பெரிய சுவரொட்டிகளை ஒட்டிய போதும்; அவர்களது கோரிக்கைக்கு வர்த்தகர்கள் போதியளவு மதிப்பளிக்க வில்லை, என பொதுமக்கள் பேசிக் கொள்கின்றனர்.

## நேற்று...

1-ம் பக்கத் தொடர்ச்சி

கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ரயில் பளை வரை வரலாம் என்பதால் இளைஞர்களை ஏற்றி வர, பளை புகையிரத நிலையத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## 16-ம், 17-ம் திகதிகளில் கைதாகி

# பலாலிமுகாமில் இருக்கும் 64 பேரின் பெயர் விபரம்

இம்மாதம் 16ம் 17ம் திகதிகளில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பலாலியிலுள்ள பாடசாலையொன்றில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் 64 பேரின் பெயர் விபரங்கள் நேற்று யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

இதில் இருவர் பெண்களாவர். 64 பேரின் பெயர் இருப்பிடம் ஆகியன கீழே தரப்படுகின்றது.

வை மாணிக்கவாசகர் (மயிலிட்டி சந்தி) க. ஆனந்தராஜா (மயிலிட்டி) செ. கண்ணன் (மயிலிட்டி) கு. சிறீரவிபாதசிகாமணி (சாவகச்சேரி) பரீட் அபூபக்கர் (சாவகச்சேரி) து. வேலுசாமி (மயிலிட்டி) சி சிவபாதநாதன் (மட்டுவில் தெற்கு) சி நாகநாதன் (மட்டுவில் தெற்கு) அ. குணரத்தினம் (பலாலி மேற்கு) ம சதாசிவம் (எட்டியாந்தோட்டை) மு. பெருமாள் (மயிலிட்டி) அ. இலெட்சுமி (மயிலிட்டி) பெ. யோகேஸ்வரி (மயிலிட்டி) த. சுரேஷ் (மயிலிட்டி) த. கிருஷ்ணகுமார் (மயிலிட்டி) த. நேசராஜா (மயிலிட்டி) த. கமலராஜா (மயிலிட்டி) த. கிருஷ்ணமூர்த்தி (மயிலிட்டி) பெ. பாலகிருஷ்ணன் (மயிலிட்டி) ஆ. தம்பிராசா (மயிலிட்டி) இ. சிவராசா (பலாலி கிழக்கு) க சத்தியநாதன் (பலாலி கிழக்கு) அ. மதியழகன் (மாங்குளம்).

செ. செல்வராசா (அளவெட்டி) சு. இராஜகிருஷ்ணர் (பலாலி கிழக்கு) ந. செல்லன் (அச்சுவேலி) ச. வரதராஜர (பலாலி) க. ம. செல்வராஜா (பலாலி கிழக்கு) கி. முத்துக்குமார் (பலாலி மத்தி) த. அருட்பிள்ளை (பலாலி கிழக்கு) சு. இராஜதுரை (பலாலி கிழக்கு) பூ. பேதுரெட்ணம் (பலாலி) மா யாக்கோவ் (பலாலி) தி. கணபதிப்பிள்ளை (பலாலி கிழக்கு) சு. அல்பொன்சு (பலாலி) த. யோகராஜா (பலாலி கிழக்கு) அ டானியல் (பலாலி வடக்கு) யா. மார்த்தபிள்ளை (பலாலி) ச நவரத்தினம் (வசாவிளான் தெற்கு) க நடராசா (வசாவிளான் தெற்கு) க. நாகரத்தினம் (புன்னாலைக்கட்டுவன்)

(மிகுதி நாளை வெளிவரும்)

## இந்திராவுக்கு இரு முத்திரை

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை கௌரவிக்கும் முகமாக அவருடைய படம் பொறிக்கப்பட்ட இரண்டு முத்திரைகள் இந்திய குடியரசு தினமான இம்மாதம் 26ம் திகதி வெளியிட்டு வைக்கப் படவுள்ளன. இந்திய அஞ்சல் துறை இவற்றை வெளியிடுகின்றது.

## ராஜீவ் - கிலிங்கர் பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

ராஜதந்திரி கிலிங்கர் நேற்றுக்காலை பாரதப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## சிறில் மத்தியு...

— 1ம் பக்கத் தொடர்

கட்சியின் கட்டுப்பாட்டை மீறி அறிக்கைகள் வெளியிட்டது உட்பட ஏழு குற்றச்சாட்டுக்கள் இவர்மீது சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பரந்தன்...

— 1ம் பக்கத் தொடர்

சகோதரிகள் பரராஜசிங்கம் என்பவரது புதல்விகளான தர்ஷினி(14) நந்தினி (8) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களது சடலமும் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது

இச்சம்பவங்களையடுத்து பரந்தன், கிளிநொச்சிப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. பரந்தன் கிளிநொச்சிப் பாதையால் நடைபெறும சகல பஸ் சேவைகளும் ரத்தாகின.

## நெடுந்தீவுக்...

— 1ம் பக்கத் தொடர்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து பெருந்தொகையான டைனமட் மருந்து, வெடி மருந்து, ஆயுதங்கள் திரிகள், பெற்றோல், இயக்கமொன்றின் துண்டுப்பிரசுரங்கள் ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளதாக நேற்றிவு அறிவிக்கப்பட்டது கைதான அறுவரும் பாதுகாப்புப் படையினரால் விசாரிக்கப்பட்டுவருகின்றனர்.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி கனகசபை

வேலணை மண்கும்பானைச் சேர்ந்த திரு இளையதம்பி கனகசபை காலமானார். இவர் சவுந்தரத்தின் அன்புக் கணவரும், யாழ் மாவட்ட உதவி சுங்க சேகரிப்பாளர் கணேஷ் அவர்களின் சிறிய தந்தையும், திருமலரின் (விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) மாமனாரும், ரவீந்திரன் (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சாந்தினி (விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சிவரஜினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), சரவணபவன் (பரி. யோவான் கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (20-01-85) பிற்பகல் 2-00 மணியளவில் மண்கும்பானில் நடைபெறும்.

தகவல்: செ. கணேஷ்,
உதவி சுங்க சேகரிப்பாளர்,
யாழ்ப்பாணம்.


விற்பனையாகிறது!

**உயிரியல் தொடர்பான விஞ்ஞான விளக்கங்கள்**

(9ம், 10ம் தர மாணவர்களுக்கானது)

தொகுப்பு

ஐங்கரநேசன் - பொ.

விலை: ரூபா 7-50

விற்பனையாளர்கள்:

1) பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ் பஸ் நிலையம் முன்பாக

2) ஸ்ரீ லங்கா புத்தகசாலை
கே. கே. எஸ் வீதி - யாழ்ப்பாணம்.

3) யூனிவேர்சல்
சுந்தர்மடம் சந்தி - யாழ்ப்பாணம்.


'ஈழமுரசு' சாயபாபா அடவர்டைசிங் அசோசியேட்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 20-1-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.